நாள்:22.08.2023

சி.சி. 138/2015

அசா.1

பெயர் :சப்னாயாஸ்மின்

க/பெ.ஆசாத்

(Accused 1, 2, 3 absent. Petition u/s.317 Cr.P.C., filed and allowed)

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. எனக்கும் என் கணவருக்கும் நடந்த திருமணமானது இரு வீட்டாரின் சம்மதத்தின்பேரில் நடந்தது என்றால் சரிதான். திருமண பேச்சு வார்த்தை நடத்திய சமய்ததில் சீர் வரிசை எதுவும் எதிரிகள் குடும்பத்தார் கேட்கவில்லை என்றால் சரிதான். என் தந்தை என் பெயரில்தான் இரண்டு கார்கள் வாங்கினார் என்றால் சரிதான். மேற்படி இரண்டு கார்களையும் 1ம் எதிரியிடமிருந்து திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான்.

2. சீதனப்பொருட்களை திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் நகைகள் மற்றும் விலை உயர்ந்த பட்டு புடவைகளை நான் திரும்ப பெற்றுக்கொள்ளவில்லை. கோவை குடும்ப நல நீதிமன்றத்தில் எனக்கும் என் கணவருக்கும் இடையே விவகாரத்து கேட்டு O.S. 18/2015 வழக்கு தொடர்ப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மற்றும் எனது கணவர் சம்மதத்தின்பேரில் மேற்படி நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி விவாகரத்து 31.12.2015ம் தேதியன்று உத்தரவானது என்றால் சரிதான்.

3. மேற்படி வழக்கில் நானும் எனது கணவரும் சேர்ந்து ஒரு குறிப்பு தாக்கல் செய்து அதன் அடிப்படையில் விவாகரத்து வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி குறிப்பில் என் கணவரிடம் இருந்து அனைத்து சீதன பொருட்களையையும் நான் திரும்ப பெற்றுக்கொண்டதாக நான் எழுதி கையொப்பம் செய்துள்ளேன் என்ளறால் சரியல்ல. அவ்வாறு அனைத்து சீதன பொருட்களையும் திரும்ப பெற்றுக்கொண்டு தற்போது அதற்கு முரணாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. 4ம் எதிரி அனுஷா என் கணவரின் அக்கா ஆவார். 5ம் எதிரி 4ம் எதிரியின் கணவர் ஆவார். 4, 5ம் எதிரிகள் ஆறுமுகம் லே அவுட், மகாலிங்கபுரத்தில்தான் குடியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல, அங்கு அவர்களுக்கு வீடு மட்டும்தான்

உள்ளது. ஆனால் அவர்கள் எங்கள் கணவர் வீட்டில்தான் குடியிருந்து எல்லா முடிவுகளையும் எடுப்பார்கள். 4, 5ம் எதிரிகளின் மகளுக்கு திருமணமாகிவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 4, 5ம் எதிரிகளை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

5. எதிரிகள் நான் அணிந்து சென்ற நகைகள் போதாது என்றும் மேலும் நகைகள் கொண்டுவரவேண்டும் என்றும் கேட்டு என்னிடம் பிரச்சனை செய்தார்கள் என்று போலீசார் வாக்குமூலத்திலும் நான் கூறியுள்ளேன். திருமணத்திற்கு பிறகு எனது நகைகள் 1ம் எதிரியின் தாயார் மற்றும் அக்காவின் பொறுப்பில்தான் இருந்தது. ஏதேனும் நிகழ்ச்சிகளுக்கு செல்லும்போது மட்டும் எனக்கு அணிவித்து விடுவார்கள். மேற்படி விபரத்தை போலீசாரிடம் நான் கூறியுள்ளேன்.

6. பவிழம் ஜுவல்லர்ஸ் நகை கடைக்கு அழைத்துசென்று எதிரிகள் எனது நகைகளை எடைபோட்டு பார்த்தார்கள் என்று போலீசாரிடம் நான்கூறியுள்ளேன். அவ்வாறு நான் எதுவும் கூறவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. கிருஷ்ணா கல்லூரியில் எந்த தேதியில் தேர்வு நடைபெற்று அதில் நான் பங்கேற்றேன் என்று தற்போது நினைவில்லை. மேற்படி தேர்வின்போது எனது கணவர் பெங்களூரில் இருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது.

7. தேர்வின்போது என் கணவர் பெங்களூரில் இருந்ததால் அவர் என்னை தேர்வு எழுத அனுமதிக்கவில்லை என்று பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. ஒரு வெற்றுத்தாளில் என்னிடம் எதிரி குடும்பத்தார் கையொப்பம் பெற்றார்கள் என்று விபரத்தை போலீசார் வாக்குமூலத்திலும் என் புகாரிலும் கூறியுள்ளேன். வெற்றுத்தாளில் கையொப்பம் பெற்றபோது 1ம் எதிரிக்கு வேறு திருமணம் செய்து வைப்பதாக எதிரிகள் குடும்பத்தார் கூறவில்லை என்றால் சரிதான், ஆனால் நானும் என் கணவரும் பிரிந்தபிறகு அவ்வாறு கூறினார்கள். மேற்படி விபரத்தை போலீசாரிடம் கூறியுள்ளேன். அவ்வாறு எதிரிகள் கூறவில்லை என்றாலும் நான்தான் வேறுதிருமணம் செய்துகொள்வதாக கூறினேன் என்றாலும் சரியல்ல.

8. எனது கைபேசி எதிரிகளிடம் இல்லை என்றால் சரியல்ல, இன்னும் எதிரிகளிடம்தான் உள்ளது. அவ்வாறு பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் விட்டில் நான் இருந்தபோது என் பெற்றோருடன்

அலைபேசியில் இயல்பாகதான் பேசிக்கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய அலைபேசியை எதிரிகள் வீட்டார்தான் வைத்துக்கொண்டார்கள். என் புகார் மற்றும் போலீசார் வாக்குமூலத்தில் என் கணவர் வீட்டில் நான் இருந்தபோது என் பெற்றோருடன் பலமுறை பேசினேன் என்று கூறிவிட்டு தற்போது முரணாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. வரதட்சனை குறித்து என் பெற்றோரிடம் பேசுவதற்கு மட்டும் அலைபேசியை என்னிடம் கொடுப்பார்கள். அவ்வாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் வீட்டார் என்னை சட்டத்திற்கு புறம்பாக வீட்டில் அடைத்து வைக்கவில்லை என்றால் சரியல்ல.

10. 5ம் எதிரி எனது படுக்கை அறையை பூட்டாமல் தூங்கவேண்டும என்று ஒருபோதும் கூறவில்லை என்றால் சரியல்ல. 5ம் எதிரியின் வீடு வேறு பக்கம் உள்ளது என்றாலும் இரவு நேரங்களில் அவர் என் கணவர் வீட்டிற்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. திருமணம் நடந்து என் கணவர் வீட்டிற்கு நான் வந்த பிறகு எனது பெற்றோர்தான் அவர்களே பொள்ளாச்சிக்கு வந்து தங்கள் வீட்டிற்கு என்னை அழைத்து சென்றார்கள் என்றாலும், அதன்பிறகு 10 மாதங்கள் என் பெற்றோர் வீட்டிலேயே நான் இருந்தேன் என்றாலும் சரிதான், நான் கர்ப்பமாக இருந்தபோது என் பெற்றோர் தங்கள் வீட்டிற்கு என்னை அழைத்து சென்றார்கள். என் பெற்றோர் என்னை அழைத்து சென்றபோது நான் கர்ப்பமாக இல்லை என்றால் சரியல்ல.

11. என் கணவர் வீட்டில் மிகுந்த பிரச்சனையாக இருந்ததால் நான் கர்ப்பமாக இருந்தபோது என் பெற்றோர் வீட்டிற்கு சென்றேன். போலீசார் விசாரனையில் என் சுயவிருப்பத்தின்பேரில் என் பெற்றோர் வீட்டிற்கு சென்றதாக கூறிவிட்டு தற்போது முரணாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12. என் கணவர் 3 முறைகள் தலாக் நோட்டிஸ் அனுப்பி அதை நான் கையொப்பமிட்டு பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். அவற்றிற்கு நான் பதில் நோட்டிஸ் அனுப்பவில்லை, பள்ளிவாசலில் பேச்சுவார்த்தை நடந்தது. மேற்படி 3 தலாக் நோட்டிஸ்களையும் நான் படித்து பார்த்தேன் என்றால் சரிதான். மேற்படி 3 நோட்டிஸ்களிலும் அனைத்து நகைகளையும் என்னிடம் திருப்பி கொடுத்துவிட்டதாக கூறியிருந்தார் என்றால் நினைவில்லை. அதற்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான்.

13. கோவை KG மருத்துவமனையில் எனக்கு குழந்தை பிறந்தது என்றால்

சரிதான். அதுபற்றி என் கணவருக்கு உடனே நான் தகவல் தெரிவித்தேன் ஆனால் அவர் வரவில்லை. குழந்தை பிறந்து 45 நாட்கள் கழித்து பள்ளிவாசலில் பேச்சுவார்த்தை நடந்த பிறகு என்னையும் என் கணவரையும் சேர்ந்து வைத்தார்கள் அதன்பிறகு என் கணவர் என் குழந்தையை பார்த்தார்.

14. என் கணவர் என் குழந்தையின் பிறப்பை சந்தேகித்தது குறித்து என் புகார் மற்றும் போலீசார் வாக்குமூலத்தில் கூறியுள்ளேன். அவ்வாறு நான் கூறவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பள்ளிவாசல் பேச்சுவார்த்தையின் பிறகு என் கணவர் என்னையும் என் குழந்தையையும் அழைத்துச்சென்று ஒன்றாக வாழ்ந்தார் என்றால் சரிதான்.

15. எந்த தேதியில் எதிரிகள் என்னையும் என் குழந்தையையும் வீட்டிற்குள் அடைத்து வைத்தார்கள் என்ற தற்போது எனக்கு நினைவில்லை. அவ்வாறு செய்வதற்கு எதிரிகளுக்கு எந்த அவசியமும் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. 3ம் எதிரி சூடான குழப்பை என் குழந்தை மீது ஊற்றி அதனால் என் குழந்தைகக்கு உடல் சிவந்து அழுதது என்று என் புகார் மற்றும் போலீசார் வாக்குமூலத்தில் நான் கூறியுள்ளேன். அவ்வாறு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் போலீசாரிடம் அவ்வாறு நான் கூறவில்லை என்றாலும் சரியல்ல.

16. 1ம் எதிரியின் அக்காவான 4ம் எதிரி தொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தையை தொட்டிலோடு சுவற்றில் வீசிவிட்டார் என்று என் புகார் மற்றும் போலீசார் வாக்குமூலத்தில் நான் கூறியுள்ளேனா என்று நினைவில்லை. அவ்வாறு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் போலீசாரிடம் அவ்வாறு நான் கூறவில்லை என்றாலும் சரியல்ல.

17. என் கணவர் வீட்டிற்கு அருகில் குடியிருப்புகள் உள்ளன என்றால் சரியல்ல தொலைவில் உள்ளன. மேற்படி வீடுகளில் உள்ள நபர்களுக்கு சம்பவம் குறித்து நேரடியாக தெரியும் என்றால் சரிதான். போலீசார் மேற்படி பக்கத்து வீட்டு நபர்களை விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. ஒரு ஜெயபால் என்பவர் என் அப்பாவின் நண்பர் ஆவார். மேற்படி ஜெயபால் என் கணவர் வீட்டிற்கு சிறிது தொலைவில் வசிக்கிறார். அவருக்கு சம்பவங்கள் குறித்து தெரியும்.

18. என் பெற்றோர் என் கணவர் வீட்டாருக்கு போன் செய்து என்னை பார்க்க அனுமதி கேட்டு அதற்கு அவர்கள் நான் இறந்துவிட்டதாக கூறினார்கள் என்றும்

அதன்பிறகு ஜெயபால் என் கணவர் வீட்டிற்கு வந்து பார்த்தார் என்றும் நான் கூறியிருப்பது பொய்யான சங்கதி என்றாலும் சரியல்ல. அவ்வாறு எதிரியின் தந்தை கூறியபோது நான் அங்குதான் நின்றிருந்தேன்.

19. 2 ம் எதிரி ஜெயபாலிடம் அவ்வாறு கூறியதாக கூறிவிட்டு தற்போது 2 ம் எதிரி என் தந்தையிடம் கூறியதாக முரணாக கூறுகிறேன் என்றால் சரியல்ல முதலில் அவ்வாறு என் தந்தையிடம் எதிரியின் தந்தை கூறினார். அதை கேட்டபிறகு என் தந்தை ஜெயபாலுக்கு போன் செய்து என்னை பார்த்து வருமாறு கூறினார். அதன்பிறகு ஜெயபால் என்னை பார்க்க என் கணவர் வீட்டிற்கு வந்தார். மேற்படி சங்கதியை என் புகாரில் கூறியுள்ளேனா என்றால் தற்போது நினைவில்லை. அவ்வாறு நான் கூறவில்லை என்றால் சரியல்ல.

20. என் சுயவிருப்பத்தின்பேரில் என் பெற்றோர் வீட்டிற்கு நான் சென்றுவிட்டேன் என்றாலும், போலீசார் என் கணவர் வீட்டிற்கு வந்து என்னை விடுவித்து செல்லவில்லை என்றாலும் சரியல்ல. பெண் போலீசார் என் கணவர் வீட்டிற்கு வந்து அவர்களுடன் பேசி என்னை விடுவித்து அழைத்துசென்றார்கள்.அவவாறு என் பெற்றோர் வீட்டிற்கு சென்றபோது என் பொருட்கள் அனைத்தையும் என் கணவர் வீட்டிலேயே விட்டுவிட்டு அதன்பிறகு பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல, கார் மட்டும்தான் திருப்பிக் கொடுத்தார்கள். குடும்ப நல நீதிமன்றத்தில் அனைத்து பொருட்களையும் பெற்றுக்கொண்டதாக எழுதிக்கொடுத்துவிட்டு தற்போது முரணாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

21. உண்மையில் நான் எனது நகைகளை திரும்ப பெறாமல் இருந்திருந்தால் பரஸ்பர விவாகரத்து மனுவில்கையொப்பம் செய்து விவாகரத்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்காது என்றால் சரியல்ல. எல்லா நகைகளையும் நான் திரும்ப பெற்றுக்கொண்டதால்தான் நான் சமரச மனுவில் குடும்ப நல நீதிமன்றததில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. என் புகார் மற்றும் போலீசார் வாக்குமூலத்தில் என் நகைகளின் முழு விபரத்தையும் கூறவில்லை என்றால் சரியல்ல.

22. விவாகரத்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டால் எனக்கும் 1ம் எதிரிக்கும் இடையே கணவன் மனைவி என்ற உறவு இல்லை என்றால் சரிதான். விவாகரத்து உத்தரவான பிறகு நான் 2 வது திருமணம் செய்துகொண்டேன் என்றால் சரிதான்.

2 வது திருமணத்தின் பயனால் எனக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. அதற்கு 5 வயது ஆகிறது. தற்போது 2 வது கணவருடன் நான் வாழ்கிறேன் என்றால் சரிதான். இன்றைய தேதிக்கு 10 வருடத்திற்கு முன்பிருந்தே நானும் 1ம் எதிரியும் பிரிந்து வாழ்கிறோம் என்றால் சரிதான். 2013ம் வருடம் நானும் 1ம் எதிரியும் பிரிந்தோம். அதன்பிறகு ஜமாத்தில் பேசி சேர்த்து வைத்தார்கள்.

23. ஒரு வருடம் கழித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அதற்கு என்ன காரணம் என்றால் பள்ளிவாசலில் பேச்சுவார்த்தை சென்றுகொண்டிருந்தது அதற்கு மரியாதை கொடுதது காவ்ல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை மேலும் என் கணவர் மனம் திருந்தி என்னுடன் வாழ்வார் என்ற நம்பிக்கை இருந்ததால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. மேற்படி விபரத்தை என் புகாரில் கூறியுள்ளேனா என்றால் இதுவரை என்னிடம் யாரும் அவ்வாறு கேட்கவில்லை. தற்போது கேட்பதால் மேற்படி காரணத்தை கூறுகிறேன்.

24. எதிரிகள் என்னை எந்த கொடுமையும் செய்யாததால்தான் உடனடியாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அசாஆ 1 நான் பொள்ளாச்சி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில், விதத்தில் அவ்வாறு புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீதுள்ள விரோதத்தால் அவர்கள் மீது பொய் சங்கதிகளை கூறி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(எதிரிகள் வழக்கறிஞர் குடும்ப நல நீதிமன்றத்தில் நகல்கள் கேட்டு மனு செய்துள்ளதாகவும், அவை கிடைக்கப்பெற்ற பிறகு அவற்றை அசா 1 மூலமாக குறியீடு செய்யவேண்டும் என்று கோரி, அனுமதிக்கப்பட்டு, அசா 1 குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.